| O.S.No. 74/2016 in Joint Trial O.S.No. 43/2021 | DW2: திரு. குமரன் த/பெ. திரு. கண்ணப்பன் | 12-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**அ.வ.எண். 74/2016 வாதிகள் அ.வ.எண். 43/2021–ல் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் செய்யாரில் வசித்து வருகிறேன். எனக்கு தற்போது 69 வயதாகிறது. 1956–ல் பிறந்தேன். நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1–ம் வாதி வரலட்சுமி என் தம்பி பாபுவின் மனைவி ஆவார். 4–ம் வாதி சுலோச்சனா எனது அக்கா, 5–ம் வாதி மகேஷ்வரி எனது தங்கை. இறந்த நித்யாநந்தம் எனது அண்ணன். நானும், எனது சகோதரிகள் அனைவரும் சிறு வயது முதல் நகராட்சி அருகே வசித்து வந்தோம். அதன்பிறகு என் தந்தை கிரையம் வாங்கிய இடத்தில் வசித்து வந்தோம்.

2. எனது தந்தை இறப்பதற்கு முன்பாக எனக்கோ, பாபுவிற்கோ, எனது சகோதரிகளுக்கோ உயில் ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து எனது சகோதரிகள் எனக்கு ஏதேனும் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. அதேபோல், என் தந்தை தாவா சொத்துக்களைப் பொறுத்து என் பெயரில் ஏதேனும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் இல்லை.

3. ஆரம்பத்தில் என் தந்தை காந்திமதி என்ற ஹோட்டலை நடத்திவந்து எங்களை காப்பாற்றினார், அப்போது நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருந்தோம். 30 ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுக்கு கடன் சுமை ஏற்பட்டது என்று சொன்னால் இல்லை. தற்போது நான் இருக்கும் வீடானது 15 x 30 அடி விஸ்தீரனம் கொண்ட வீடாகும். 4, 5 வாதிகள் என் வீட்டிற்கு பின்புறம் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை.

4. அ.வ.எண். 43/2021 வழக்கை பொறுத்து கூட்டுப்பங்குரிமை சொத்து என்பதால் அதில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நான் கிரையம் வாங்கியதற்கு ஆதரமாக கிரைய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, என் தந்தை

பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் விண்ணப்பதாரர் என்று எனது பெயர் குறிப்பிட்டுள்ளதே தவிர உரிமையாளர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள விளம்பரமானது இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. இந்து வாரிசு சட்டத்தின்படி உடன்பிறந்த சகோதரிகளுக்கும் சொத்துக்களில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் எனக்கு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு எனது பெயரில் உள்ள பட்டா, வரி ரசீது, கிரைய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குழாய் வரி ரசீது என்னுடைய பெயரில் உள்ளது. குழாய் இணைப்பானது 1ம் பிரதிவாதி நித்யானந்தம் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அதிக கடன் சுமை இருந்ததால் எனது சகோதரிகள் சொத்தினை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்றாலும், எனக்கு எந்த காலத்திலும் அவர்கள் சொத்தின் உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்தில் கொஞ்ச இடத்தினை நான் அனுபவித்து வந்தேன் என்றாலும், மீதமுள்ள இடத்தினை எனது சகோதரிகள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. 1-ம் வாதி என் மீது செய்யாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 1-ம் வாதி தாவா இடத்தில் வசிக்கக்கூடாது என நான் அடித்து துறத்தியதால் அவர் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் இந்த வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்துக்கள் அனைத்திலும் எனக்கு முழு உரிமை இல்லை என்றாலும், அதில் எனக்கும், எனது சகோதரிகளுக்கும் சரிசம உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/5 பாகம் வழங்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

வாதிகள் பாகத்தினை பலமுறை என்னிடம் கேட்டனர் என்றாலும், நான் தராமல் அவர்களை பலமுறை அலைக்கழித்தேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு 2 பாகம் அதிகமாக கொடுக்கும் பட்சத்தில் நான் சொத்தில் வாதிகளுக்கு பாகம் கொடுக்க தயாராக உள்ளேன். சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் வாதிகளுக்கு சொத்தில் பாகம் கொடுக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் நான் வழக்கினை கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றாலும், அதனை நான் பிரித்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும், வாதிகளின் தாவா தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

8. 1-ம் பிரதிவாதியான என் சகோதரர் தாவா சொத்துக்களில் பாகம் பிரித்துக்கொள்ள எந்த ஆட்சேபணையும் இல்லை என்று எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி தாவா இடத்தில் ஒரு பகுதியினை கட்டிடம் கட்டி அனுபவித்து வருவதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் அது சரியல்ல. வாதிகள் என் தந்தை கடைசி காலம் வரையில் அவருக்கு உறுதுணையாக இருந்து அவருக்கு பணிவிடை செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 4-ம் வாதி பெங்களூரில் இருந்தபோது கடன் சுமை அதிகரித்ததால்தான் பெங்களூரில் போய் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில்நான் தாவா சொத்தில் இவ்வளவு நாள் கஷ்டப்பட்டுள்ளேன், அதனால் எனக்கு இரண்டு பாகம் வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சட்டப்படி தாவா சொத்தில் நான் அனைவருக்கும் சரிசம பாகம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>அ.வ.எண். 74/2016 4 முதல் 6 பிரதிவாதிகள் மற்றும் அ.வ.எண்.43/2021-ல் 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வாதிகள் எனது உடன்பிறந்த சகோதரிகள். 1-ம் பிரதிவாதி என் உடன்பிறந்த சகோதரர். 1-ம் பிரதிவாதியின் வாரிசுகள்தான் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள் என்றால் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள். தாவா சொத்துக்கள் கண்ணப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை, நான் சம்பாதித்து அவரது பெயரில் வாங்கிய சொத்துக்கள் ஆகும். அந்த கிரைய ஆவணத்தில் நான் சம்பாதித்து கிரையம் பெற்றது என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து முழுக்க முழுக்க எனது தந்தை கண்ணப்ப முதலியார் கிரையம் வாங்கிய சொத்து என்றாலும், நான் வழக்கிற்காக நான் வாங்கிக்கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. என் தந்தை கிரையம் வாங்கிய சமயத்தில் தாவா சொத்து காலி மனையாக இருந்தது. அதன்பிறகு அதில் வீடு, கடைகள் கட்டி ஒரு கடையில் நானும், ஒரு கடையில் 1-ம் பிரதிவாதியும் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல, ஒரே கடைதான் உள்ளது, அதில் நான்தான் அனுபவத்தில் இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தொழில் வரி நோட்டீஸில் நித்தியானந்தம், கோபு, குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நோட்டீஸ் – **பி.சா.ஆ.21** ஆகும்.

3. தாவா சொத்தில் அறிஞர் அண்ணா கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதற்கு கடனை செலுத்த சொல்லி அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு 1-ம் பிரதிவாதி நித்யானந்தத்திற்கு முறையாக அனுப்பப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அறிவிப்புதான் நித்யானந்தத்திற்கு கூட்டுறவு சங்கத்தால் வழங்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். அந்த 28.08.2006 தேதியிட்ட அறிவிப்பு – அசல் – **பி.சா.ஆ.22** ஆகும். அந்த கடனை 1-ம் பிரதிவாதி நித்யானந்தம்தான் முறையாக செலுத்தினார் என்றால் சரிதான். என் தந்தை தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தினை பிரித்துக்கொள்வதற்கு 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்தவொரு ஆட்சேபணையும் இல்லை என்றாலும், அவர்கள் அனுபவித்து வரும் சொத்தை

அவர்களுக்கே ஒதுக்குவதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

**என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 13:01:55 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**